

தருமபுரியில் நடைபெற்ற ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் பொதுப்பணிதுறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு 2026 தேர்தல் களப்பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினர். உடன் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி, மேற்கு மாவட்டச் செயலாளர் பி.பழனியப்பன், முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணி, முன்னாள் மாவட்ட பொறுப்பாளர்கள் பி.என்.பி.இன்பசேகரன், பி.தருமச்செல்வன், மற்றும் நகரச் செயலாளர் நாட்டான்.மாது மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்படி பாதிக்கப்பட்ட நபரான சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், கோயில்புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த எல்.சாந்தாமணி, த/பெ.லட்சுமணன் என்பவருக்கு தமிழ்நாடு அரசு வழங்கிய தீருதவித் தொகை ரூ.3,50,000/ (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம்) தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத் தலைவர், முனைவர் நீதியரசர்.ச.தமிழ்வாணன் வழங்கினார். துணைத் தலைவர் இமயம் (வெ. அண்ணாமலை), உறுப்பினர்கள் செ.செல்வகுமார், முனைவர் க.ஆனந்தராஜா, மு.பொன்தோஸ், பொ.இளஞ்செழியன் ஆகியோர் உடன் இருந்தனர். சேலம் மாவட்டம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் ந.ஜெயகுமாரும் உடன் உள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (27.5.2025) தலைமைச் செயலகத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், துணை மேயர் மு.மகேஷ் குமார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு

# சென்னை - சுற்றியுள்ள பகுதிகளில் முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, மே 29 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (27.5.2025) தலைமைச் செயலகத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு சென்னை நகரின் வளர்ச்சிக்கேற்ப அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் தொடர்ந்து மேம்படுத்தி வருகின்றது. பாலங்கள், அகலப்படுத்தப்பட்ட சாலைப்பணிகள் மேற்கொள்ளும்போது அவற்றுடன் மழைநீர் வடிகால் கட்டமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் சென்னை மாநகரம் முழுவதும் மழைநீர் வடிகால் கட்டமைப்பு வசதிகள் மிகப் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக சென்ற ஆண்டு மழைக்காலத்தின் போது கனமழை மற்றும் மிக கன மழை சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பொழிந்தபோதும் ஒரு சில இடங்களைத் தவிர்த்து அனைத்து பகுதிகளிலும் சில மணி நேரங்களிலேயே வெள்ளநீர் வடிந்து போக்குவரத்து நடைபெற்றது.

மழைநீர் வடிகால் கட்டமைப்பு பணிகளுடன், கழிவு நீரகற்றும் நிலையங்கள், நீர்வழிக் கால்வாய்கள், சென்னை நகரின் பல்வேறு கால்வாய்கள் கடலில் சென்று சேரும் இடங்களில் உள்ள முகத்துவாரங்களை தூர்வாரி சீரமைக்கும் பணிகள், பூங்காக்களில் மழைநீரை உறிஞ்சும் வகையில் அமைக்கப்பட்ட ஸ்பாஞ்ச் பார்க்குகள் என பல்வேறு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட காரணத்தால், சாலைகளில் வெள்ளநீர் மிக விரைவில் வடிந்து சில மணி நேரங்களிலேயே இயல்பு நிலை திரும்பியது.

துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், சென்னை பெருநகர மாநகராட்சியால் மேம்பாட்டு பணிகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நீர்வழிக் கால்வாய்கள், குளங்கள் மறு சீரமைக்கும் பணிகள், 2024 வடகிழக்கு பருவமழையின் போது நீர் தேங்கிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள், நெடுஞ்சாலைத்துறை, நீர்வளத் துறை, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (டான் ஜெட்கோ), வனத்துறை, சென்னை பெருநகர கழிவு நீரகற்று வாரியம், தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் உள்ளிட்ட துறைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல வாரியாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த பணிகள் நடைபெறும் பகுதிகளைச் சேர்ந்த அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து கலந்துரையாடி பணிகள் விரைவாக முடிவடைய நடவடிக்கை மேற்கொள்ள துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். பருவமழையால் பொது மக்கள் பாதிக்காத வகையில் அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து களப்பணியாற்றி அரசிற்கு நற்பெயர் பெற்றுத் தரவேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், துணை மேயர் மு.மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், செயலாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்பும் அறனுமாய் இருந்து எங்களை விட்டுப்பிரிந்தாய்
உன் நினைவுகளே எங்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு !





திருமதி. M.A. பரமேஸ்வரி M.A.,B.L.,

என்றும் நீங்கா நினைவுகளுடன்

ஆ.இராசா M.P
துணைப்பொதுச்செயலாளர் தி.மு.க

செல்வி.மயூரி இராசா MSc., LLM (UK)

மற்றும்

குடும்பத்தினர் & உறவினர்கள்
வேலூர் கிராமம், பெரம்பலூர் மாவட்டம்